06-08-2023 காலை முரளி ஓம் சாந்தி "அவ்யக்த பாப்தாதா" ரிவைஸ் 31.03.1995

பரமாத்ம சந்திப்புத் திருவிழாவின் பரிசு - கிரீடம், சிம்மாசனம் மற்றும் திலகம்

இன்று எல்லையற்ற தந்தை எல்லையற்ற நிலையில் குழந்தைகள் அனைவரையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் எல்லையற்ற தந்தை மற்றும் நீங்கள் அனைவரும் கூட எல்லையற்ற மாலிக் மற்றும் பாலகர்கள். பாப்தாதா சிநேகி சகயோகி குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி யடைந்து கொண்டிருக்கிறார். குழந்தைகள் பாபாவைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார்கள். பாபாவுக்கு அதிகக் குஷியா, அல்லது குழந்தைகளுக்கு அதிகக் குஷியா? என்ன சொல்வீர்கள்? இருவருக்குமா? இது தான் பரமாத்ம சந்திப்பின் திருவிழா என்று சொல்வது. திருவிழாக்களோ அநேகம் நடைபெறுகின்றன. ஆனால் பரமாத்ம சந்திப்பின் திருவிழா ஒரு சங்கமயுகத்தில் மட்டுமே நடைபெறுகிறது. முழுக் கல்பத்திலும் நடைபெற முடியாது. இப்போது நடைபெறு கிறது, இனிமேலும் நடைபெறும். உங்கள் அனைவருக்கும் கூட இந்தத் திருவிழா பிடித்திருக் கிறது இல்லையா? பாப்தாதாவோ குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்துக் குஷி அடைகிறார். மேலும் மனதில் பாடல் பாடுகிறார் - ஆஹா குழந்தைகளே, ஆஹா! எந்த ஒரு பாக்கியம் கனவில் கூட இல்லாதிருந்ததோ, சங்கல்பத்தில் கூட இல்லாதிருந்ததோ, ஆனால் இப்போது நனவில் (நிஜத்தில்) உயர்ந்த பாக்கியத்தை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு வரின் நெற்றியின் மீது சிரேஷ்ட பாக்கியத்தின் ரேகை ஜொலித்துக் கொண்டிருக்கிறது. அனைவரும் ஜொலிக்கின்ற நட்சத்திரங் கள் தான் இல்லையா? உங்களது இந்த சிரேஷ்ட பாக்கியம் நினைவில் உள்ளது இல்லையா? ஏன் சிரேஷ்ட பாக்கியம்? ஏனென்றால் பாக்கிய விதாதா மூலம் பாக்கியவான் ஆத்மாக்கள் உங்களுடைய தெய்வீக பிராமண ஜென்மம் உருவாகியுள்ளது. பாபாவையும் பாக்கியவிதாதா எனச் சொல்கிறார்கள் மற்றும் பிரம்மா வையும் கூட பாக்கியவிதாதா எனச் சொல்கிறார்கள். மற்றும் உங்கள் அனைவரின் ஜென்மமும் கூட பாப்தாதா மூலம் உருவாகியுள்ளது. ஆக, யாருடைய தந்தை சுயம் பாக்கியவிதாதாவாக இருக்கிறாரோ, அவருடைய பாக்கியம் எவ்வளவு சிரேஷ்டமானதாக இருக்கும்! பரமாத்ம சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? (இரட்டை வெளிநாட்டினரிடம்) இவர்களும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்! எல்லையற்ற திருவிழாவில் இரட்டை வெளி நாட்டினர் இல்லையென்றால் எல்லையற்றது எனச் சொல்லப்படுவதில்லை. ஆக, உங்களுக்கும் கூட விசேஷ பார்ட் உள்ளது. அதை பாபா மற்றும் குழந்தைகள் அனைவரும் பார்த்துப் பார்த்துக் குஷி அடைகின்றனர். பாக்கியவிதாதா மூலம் ஜென்மம் ஏற்படுவது என்பது அனைத்திலும் நம்பர் ஒன் பாக்கியமாகும். அதோடு முழுக் கல்பத்திலும் எந்த ஒரு ஜென்மத்திலும் ஒரே பரமாத்மா தந்தையும் ஆகிறார், ஆசிரியரும் ஆகிறார், சத்குருவும் ஆகிறார் மற்றும் சர்வ சம்பந்தங்களாகவும் இருக்கிறார் என்றால் - இது போல் பாக்கியம் சத்யுகத்திலிருந்து கலியுகம் வரை யாருக்காவது கிடைத்துள்ளதா? ஆனால் இப்போது உங்களுக்குக் கிடைத்துள்ளது. இப்போது நீங்கள் நிச்சயத்துடனும் நஷாவுடனும் சொல்கிறீர்கள் - எங்களுக்குப் பாலனை அளிப்பவர் பரம ஆத்மா. உலக மனிதர்கள் வெறும் பேச்சுக்காகச் சொல்கிறார்கள் - பரமாத்மா பாலனை

செய்து கொண்டிருக்கிறார். ஆனால் நீங்கள் நடைமுறை அனுபவத்தில் சொல்கிறீர் கள் - பரமாத்மா தந்தையாக இருக்கிறார் மற்றும் தந்தை தாம் பாலனை அளிப்பவர், பாலனை செய்து கொண்டிருக்கிறார். நஷா இருக்கிறது இல்லையா, அல்லது கொஞ்சம்- கொஞ்சம் மறந்து விடுகிறீர்களா? போகப்போக உங்களது சிரேஷ்ட பாக்கியத்தை சாதாரண மாக நினைத்து விடுகிறீர்கள். உண்மையில் சிரேஷ்டமானது, ஆனால் அதை சாதாரணமாக எடுத்துக் கொள்கிறீர் கள். எனவே எந்த நஷா மற்றும் குஷியின் ஜொலிப்பு சதா இருக்க வேண்டுமோ, அது இருப்பதில்லை. அது போல் ஒரு விநாடி கூட மறக்க முடியாத ஒன்றை சாதாரணமாகப் புரிந்து கொள்கிறீர்கள் - தந்தை கிடைத்து விட்டார், நம்முடையவர் ஆகி விட்டார். நாமும் பாபாவுடை யவர் ஆகி விட்டோம், நம்முடையவர் என்றால் நஷா (பெருமிதம்) இருக்க வேண்டும் இல்லையா? ஆனால் சில நேரம் உயர்வாக உள்ளதென்றால், சில நேரம் மத்யம், சில நேரம் சாதாரணமாக ஆகி விடுகிறது. யோசித்துப் பாருங்கள், நம்முடைய தந்தை பரம ஆத்மா! மேலும் பிறகு நேரடியாகப் பரம ஆத்மாவே நம் ஆசிரியர். என்ன கற்பித்தார்? உங்களை என்னவாக ஆக்கி விட்டார்? திரிநேத்திரி, திரிகாலதரிசி, திரிலோகிநாத்! அந்த மாதிரியான படிப்பை யாராவது படிக்கிறார்களா? இது வரை இது போன்ற டிகிரி கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஜட்ஜ், வக்கீல், டாக்டர், இஞ்சினீயர் - இந்த டிகிரிகளை எல்லாம் பார்த்திருக்கிறீர்கள். ஆனால் திரிலோகிநாத், திரிகாலதரிசி, திரிநேத்திரி, ஞானம் நிறைந்தவர் அந்த மாதிரி டிகிரி பார்த்திருக்கிறீர்களா? துவாபரயுகத்திலிருந்து கலியுகம் வரை யாருக்காவது கிடைத்திருக்கிறதா? உங்களுக்குக் கிடைத்ததா? நீங்களும் கூட 63 பிறவிகள் எடுத்திருக்கிறீர்கள். ஆக, யாருக்கும் கிடைக்க வில்லை, கிடைக்கப் போவதும் இல்லை. அத்தகையவர் நம்முடைய ஆசிரியர். விஞ்ஞானிகள் விஞ்ஞானத்தின் திட்டங்கள் எவ்வளவு தான் உருவாக்கினாலும், திரிலோகம் வரை சென்று சேர முடியாது. மூன்று உலகங்களின் ஞானம் கிடைக்க முடியாது. ஆனால் உங்களுக்குள்ளேயோ 5 வயதுக் குழந்தை கூட மூன்று உலகங்களின் ஞானம் கொடுப்பார். அவரும் பெருமிதத்தோடு சொல்வார் -- ஆம், சூட்சும வதனம் உள்ளது, மூலவதனம் உள்ளது. ஆக, பரம ஆத்மா ஆசிரியராக வும் இருக்கிறார். சிரேஷ்டமான கல்வியின் மூலம் இந்த டிகிரியே கிடைக்கச் செய்தார், ஆனால் உலகத்தில் அனைத்திலும் பெரியதிலும் பெரிய பதவி ராஜ்ய பதவி ஆகும். படிப்பினால் பதவியோ கிடைக்கிறது இல்லையா? ஆக, உங்களை ராஜா ஆக்கி விட்டீர்களா? இப்போது ராஜாவா, அல்லது ஆக வேண்டுமா? இப்போது நீங்கள் ராஜா, ஆனால் தரையில் அமர்ந்திருக் கிறீர்கள். பக்கா கட்டடமும் இல்லை. கூடாரத்தில் அமர்ந்திருக் கிறீர்கள். ஆக, பாருங்கள், சிரேஷ்டத்திலும் சிரேஷ்ட பதவி அனைத்திலும் பெரியதிலும் பெரிய பதவி ராஜ்ய பதவி ஆகும். படிப்பினால் பதவியோ கிடைக்கிறது இல்லையா? ஆக, உங்களை ராஜா ஆக்கி விட்டீர்களா? இப்போது ராஜாவா அல்லது ஆக வேண்டுமா? இப்போது நீங்கள் ராஜா, ஆனால் தரையில் அமர்ந்திருக்கிறீர்கள். பக்கா கட்டடமும் இல்லை. கூடாரத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். ஆக, பாருங்கள், சிரேஷ்டத்திலும் சிரேஷ்ட பதவி ராஜ பதவி. நீங்கள் இப்போதும் சுயராஜ்ய அதிகாரி, வருங்காலத்திலும் உலக ராஜ்ய அதிகாரி ஆகத் தான் வேண்டும். இது உறுதி தான் இல்லையா? யார் ராஜ்யம் செய்ய வேண்டும்? நீங்கள் ராஜ்யம் செய்வீர்களா, அல்லது உங்கள் மீது யாராவது ராஜ்யம் செய்வார்களா? இல்லை, இவ்வளவு பேரும் ராஜா ஆகி விடுவீர்களா? இத்தனைப் பேரும் ராஜ்யம் செய்வீர்களா? ஆக, தங்களுடைய பாக்கியத்தைப் பாருங்கள் - பரம ஆத்மா

என்னுடைய ஆசிரியர், ராஜ்ய பதவி தருபவர். மேலும் பிறகு சத்குரு ஆகி குரு என்ன செய்கிறார்? மந்திரம் கொடுக்கிறார் இல்லையா? ஆக, சத்குரு என்ன மந்திரம் கொடுத்தார்? மன்மனாபவ. சத்குரு மூலம் மகாமந்திரமும் கிடைத்தது மற்றும் சர்வ வரதானங்களும் கிடைத்தன. எத்தனை வரதானங்கள் கிடைத்துள்ளன? வரதானங்களின் லிஸ்ட் பாருங்கள், எவ்வளவு நீளமானது! நாள்தோறும் வரதானம் கிடைக்கிறது இல்லையா? எவ்வளவு காலமாகக் கிடைத்து வருகிறது? இத்தனை வரதானங்கள் எந்த ஒரு சீடருக்கும் எந்த ஒரு குருவும் கொடுக்க முடியாது. நாள்தோறும் வரதானம் கொடுக்கும் அப்படிப்பட்ட சத்குருவைப் பார்த்திருக் கிறீர்களா? இப்போது நஷா உள்ளது இல்லையா? (ஹாஞ்ஜீ). மிக நல்லது. சதா அப்படியே வைத்திருங் கள். இங்கிருந்து பஸ்ஸில் செல்வீர்களானால் நஷா இறங்கத் தொடங்கி விடுகிறது என்று அந்த மாதிரி இருக்கக் கூடாது. சதா அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

பாப்தாதா குழந்தைகள் அனைவரையும் சதா ஒவ்வொரு பாடத்திலும் நம்பர் ஒன்னாகப் பார்க்க விரும்புகிறார்கள். ஆக, நீங்கள் நம்பர் ஒன்னா அல்லது இனி ஆக வேண்டுமா? நஷாவோடு சொல்லுங்கள், நாங்கள் ஆகவில்லை என்றால் வேறு யார் ஆவார்கள்? வெளி நாட்டினருக்கு இரட்டை நஷா உள்ளது இல்லையா? நல்லது. பாபாவும் குஷியடைகிறார் - என்னுடைய குழந்தைகள் ஒவ்வொருவரும் ராஜா குழந்தைகள். பிரஜை இல்லை. பிரஜை களோ பின்னால் வருபவர்கள். நீங்களோ பிறகும் அதிர்ஷ்டசாலிகள் -- இவ்வளவு சந்திப்ப தற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள். டென்ட்டில் இருக்க நேர்ந்தால் என்ன? மண்ணில் தூங்கிக் கொண்டிருக் கிறீர்களா, இல்லையே! படுக்கை விரிப்பில் தான் தூங்கிக் கொண்டி ருக்கிறீர்கள். பிரம்மா போஜனமோ நன்றாகக் கிடைக்கிறது இல்லையா? மண்ணோடு கூடியதாக இல்லையே? அன்போடு சாப்பிடுகிறீர்கள் இல்லையா? கொஞ்சம் இடைஞ்சல் களோ இருக்கவே செய்கின்றன. இருக்கத் தான் செய்யும். ஏன்? மாயா மற்றும் பிரபுவின் விளையாட்டு இரண்டும் கூடவே நடந்து கொண்டிருக்கின்றன. பரமாத்மா மூலம் திருவிழா நடைபெற்றது என்றால் மாயாவும் குழப்பத்தை அவசியம் ஏற்படுத்தும். உங்கள் வேலை திருவிழா நடத்துவது, அதன் வேலை குழப்பம் ஏற்படுத்துவது. (யாரோ சொன்னார்கள் - புயல் வந்தது) எந்தப் பிரச்சினையும் இல்லை. உங்கள் புருஷார்த்தத்தின் புயல் உள்ளது, மற்றும் இது காற்றின் புயல். என்ன இப்படி ஆயிற்று என்று பயப்படவில்லை தானே? இல்லை, புயல் வந்தது, அல்லது மழை வந்தது, எவ்வளவு தான் குழப்பங்கள் ஏற்பட்டாலும், உங்கள் மனம் ஆடாததாக உள்ளது இல்லையா? மாதாக்கள் பயப்படவோ இல்லை தானே? கூடாரம் பறந்து விட்டது, (புயல் காற்றில் தூக்கி வீசப்பட்டு விட்டது) என்ன செய்வது? என்னவாகும், உடல் நிலை நன்றாக இருக்குமா, இல்லையா? எது நடந்தாலும், பக்தியில் பட்ட கஷ்டம் போல் இல்லை தானே? மஜாவில் இருக்கிறீர்கள் இல்லையா? ஆக, இந்தத் திருவிழா நன்றாக இருந்ததா அல்லது குழப்பத்தைப் பார்த்து பயந்து விட்டீர்களா? இன்னும் இரண்டு நாள் வைக்கலாமா? நல்லது. பாப்தாதாவும் மாயாவின் குழப்பத்தைப் பார்த்து சுற்றிக் கொண்டே வருகிறார். விளையாட்டைப் பார்க்கிறார் -- குழந்தைகள் என்ன செய்கிறார்கள், மற்றும் மாயா என்ன செய்கிறது?

பாப்தாதாவுக்குக் குழந்தைகளின் அன்பைப் பார்த்துக் குஷி. அன்பு தான் இந்தத் திருவிழாவை உருவாக்கியிருக்கிறது. பாபாவுக்கு அன்பு உள்ளது என்றால்

குழந்தைகளுக்கும் அன்பு உள்ளது. இருவரும் சேர்ந்து விட்டால் என்னவாகும்? திருவிழா! காட்சியும் எவ்வளவு நன்றாக உள்ளது! இது போல் நினைத்துப் பார்த்ததுண்டா - இவ்வளவு பெரிய பரிவாரம் கிடைக்கும் மற்றும் இவ்வளவு பெரிய பரிவாரம் யாருக்காவது இருக்குமா? உங்களுக்கு வீடு எத்தனை? (ஒன்று) மற்றும் உங்கள் சேவாஸ்தானங்கள் எத்தனை? (அநேகம்) அப்போது அதையும் பாபாவின் வீடு எனச் சொல்கிறீர்கள் இல்லையா? ஆக, பாபாவின் வீடு உங்கள் வீடு. உலகம் சொல்கிறது - வீடு-வாசலை விடுகிறார்கள், நீங்கள் எத்தனை வீடுகளை உருவாக்கியிருக்கிறீர்கள். எண்ணிப் பார்க்க முடியாது. நினைவு வைக்க வேண்டி உள்ளது. ஆக, இது விடுவது கிடையாது, உருவாக்கு வதாகும். பரிவாரத்தை விட்டு விட்டார்கள், அல்லது பரிவாரத்தை இவ்வளவு பெரியதாக ஆக்கி யிருக்கிறார்கள் -- அப்போது சந்திப்பதே கடினமாக உள்ளது. பிராமணர்கள் அனைவரும் எங்கெல்லாம் உள்ளனர், ஓரிடத்தில் சந்திக்க முடியுமா? கடினமாக இருக்கும் இல்லையா? ஏனென்றால் மற்றவர்களின் ராஜ்யம் இல்லையா? உங்களுடைய ராஜ்யமோ இல்லை. ஆனால் பாபா கிடைத்தார், எல்லையற்ற பரிவாரம் கிடைத்தது. ஆக, எல்லையற்றதை நினைவு செய்வதில் எல்லையற்ற குஷி, எல்லையற்ற நஷா இருக்கும். எல்லைக்குட் பட்டதில் புரிந்து கொள்கிறார்கள், நானோ இன்ன தேசத்தில் இருக்கிறேன், இன்ன தேசத்தைச் சேர்ந்தவன். இந்த (ஜோன்) மண்டலத்தைச் சேர்ந்தவன். அப்போது எல்லைக்குட் பட்டதாக உள்ளது. ஆனால் நிமித்த மாத்திரம் அடையாளமாகச் சொல்கின்றனர் - இவர் இன்ன ஜோன், இன்ன இருப்பிடம். மற்றப்படி தன்னை எல்லையற்ற நிலையில் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? நியமமும் வைக்க வேண்டி உள்ளது. அநேகர் இப்படியும் யோசிக்கின்றனர் - இதென்ன - பேஜ் அணியுங்கள், அப்போது தான் சாப்பாடு கிடைக்கும். உங்களை சாப்பிடுவதில் தொந்தரவு செய்கிறார்கள் இல்லையா? ஆனால் இதைச் செய்யத் தான் வேண்டி உள்ளது. ஏனென்றால் விதிமுறையைப் பின்பற்றுவதில் நன்மை உள்ளது. இது பந்தனம் இல்லை. ஆனால் பந்தனங்களில் இருந்து நிர்பந்தன் ஆக்குவதற்கான சாதனம். இதென்ன புது வி'யம் வந்துள்ளது -- இப்படி யோசிக்கக் கூடாது. சங்கல்பங்களோ பாபாவிடம் சென்று சேர்கின்றன இல்லையா? ஆனால் மரியாதா புருஷோத்தம் நீங்கள் தாம் இல்லையா? அல்லது பெரிய தாதிகள் மட்டும் தான் மரியாதா புருஷோத்தமா? நீங்கள் அதிலிருந்து விடு பட்டவரா? மரியாதா புருஷோத்தம் என்றால் மரியாதாவுக்கு உள்ளே இருப்பவர்கள், அதன் படி நடப்பவர்கள். ஹாஞ்ஜீ என்ற பாடம் பக்காவாக உள்ளது இல்லையா? ஏதேனும் பிரச்சினை வரும் போது ஹாஞ்ஜீ (ஆம்) என்று ஆகிறதா நாஜீ (இல்லை) என்று ஆகிறதா? யாராவது அந்த மாதிரி பேசும் போது ஹாஞ்ஜீக்கு பதிலாக நாஜீயில் அவ்வளவு பக்கா ஆகி விடுகிறார்கள் - பாபாவே சொன்னால் கூட கேட்க மாட்டார்கள். எப்படி ஸ்தாபனையில் சிறு-சிறு குழந்தைகள் வந்த போது பாப்தாதா அவர் களுக்குப் பாடத்தைப் பக்கா ஆக்கு வதற்காக நா (இல்லை) எனச் சொல்வதென்றால் நாஸ்திகர். ஆம் சொன்னால் ஆஸ்திகர் என்று சொன்னார். அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்? ஆஸ்திகரா? நாஸ்திகரோ இல்லை தானே? சில நேரம் அவ்வாறு ஆகி விடுகிறீர்கள். விளையாடு கிறீர்கள். மாயா பற்றியும் ஞானம் நிறைந்தவர் ஆகி விட்டீர்கள். ஏனென்றால் மாயாவும் ஞானம் நிறைந்தது. கீழே வீழ்த்துவதில் மாயா ஞானம் நிறைந்தது. நீங்கள் பறப்பதில் ஞானம் நிறைந்தவர்கள். ஆக, மாயாவும் பார்க்கிறது - இவர் பறப்பது கொஞ்சம் மேலே-கீழே ஆகி விட்டால் அதைப் பார்த்து உடனே போராடத் தொடங்கி விடுகிறது. நீங்கள் ஞானம் நிறைந்த வராக

இருப்பதால் அறிந்து கொண்டு விடுகிறீர்கள் என்றால் தோல்வி (ஹார்) அடைவதில்லை. ஆனால் வெற்றியின் மாலை (ஹார்) கழுத்தில் விழுகிறது. அனைவரின் கழுத்திலும் வெற்றி மாலை உள்ளதா அல்லது அவ்வப்போது அதைக் கீழே இறக்கி வைத்து விடுகிறீர்களா? நல்லது.

பின்னால் இருப்பவர்கள் மகிழ்ச்சியில் இருக்கிறீர்களா? இதுவும் மதுபன் ஏரியா தான் இல்லையா? ஆக, மதுபனில் இல்லாமல் இவ்வளவு பெரிய திருவிழா நடைபெற முடியுமா? முடியாது இல்லையா? ஆக, மதுபன் என்பது எல்லையற்ற வீடு. இங்கே அனைத்தும் எல்லையற்றது. மற்ற மற்ற இடங்களில் பிறகும் அனைத்தையும் பார்க்க வேண்டி உள்ளது. ஆனால் இங்கே சங்கல்பம் செய்ததும் நடந்து விடும். ஆக, அனைவரும் தங்கள் பாக்கியத் தின் மூலம் பரமாத்ம திருவிழாவுக்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். யார் முதல் தடவை இந்தக் கல்பத்தில் வந்திருக்கிறீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். (சுமார் 13-14 ஆயிரம் சகோதர- சகோதரிகளின் சபை, அதில் அதிகமாக புதிய குழந்தைகள் வந்துள்ளனர்) நல்லது டி.வி.யில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுவும் பாருங்கள், பெரும்பாலான விஞ்ஞான சாதனங்கள் இப்போது வெளிவந்திருக்கின்றன. சில வருடங்களுக்கு முன்பு இந்த விஞ்ஞான சாதனங் களும் இல்லை. ஆனால் யாருக்காக வெளிவந்திருக்கின்றன? உங்களுக்காகத் தான். பாப்தாதாவும் விஞ்ஞானி குழந்தைகளுக்கு வாழ்த்து சொல்கிறார். ஏனென்றால் பாபாவின் குழந்தைகள் அதன் மூலம் சுகத்தையோ பெற்றுக் கொள்கிறார்கள் இல்லையா? ஆக, இது எவ்வளவு நன்றாக உள்ளது! ஆனால் பாப்தாதா இப்போது எதை விரும்புகிறார்? ஸ்தாபனை ஆகி எத்தனை வருடங்கள் ஆகின்றன? வைரவிழா கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக் கிறீர்கள். ஆக, பாப்தாதா இப்போது எல்லாக் குழந்தை களையும் ராஜாக் குழந்தைகள் என்று சொன்னார் இல்லையா? அனைவரும் ராஜாக்கள். ராஜா என்றால் சிம்மாசனத்தில் அமர்பவர் இல்லையா? ராஜ்யத்தின் அடையாளம் கிரீடம், சிம்மாசனம் மற்றும் திலகம் இருக்கும். ஆக, பாப்தாதா இந்த வருடத்திலிருந்து, புதியவரா யினும் பழையவராயினும் - புதியவராகவே இருந்தாலும் முடிவின் சமயத்திலோ புதியவர் களுக்கும் சமீபம், பழையவர்களுக்கும் சமீபம். எங்களுக்கும் கூட 60 வருடங்கள் கிடைக்க வேண்டும் என்று அப்படி இல்லை. நீங்கள் மேக்கப் செய்ய வேண்டும். கடைசியில் வந்திருக்கிறீர்கள் என்றால் வேகமாகச் செல்ல வேண்டும். ஆனால் சம்பன்னமாவதற்கான, சமாப்தி சமயம் அனைவருக்கும் ஒன்று தான். அதனால் புதிய வராயினும் பழையவராயினும் நான் சுயராஜ்ய அதிகாரி ஆத்மா - சதா ஸ்மிருதியின் திலகம் அணிவிக்கப் பெற்றிருக்க வேண்டும். சில நேரம் அழிந்து விடுகிறது, சில நேரம் அணிவிக்கப் பட்டுள்ளது என்று அந்த மாதிரி இருக்கக் கூடாது. ராஜ்ய அதிகாரி என்றால் திலகதாரி - இந்த ஸ்மிருதியின் திலகம் அழியாததாக இருக்க வேண்டும், சாதாரணமானதாக இல்லை. நான் திலகதாரி, நான் உலக நன்மையின் பொறுப்பு கிரீடதாரி. எவ்வளவு பெரிய உலகம் மற்றும் நீங்கள் அனைவரும் விஷ்வ கல்யாண்காரிகள். தனியாக பாபா மட்டும் இல்லை. பாபாவின் துணை நீங்கள் அனைவரும். ஆக, உலக நன்மையின் பொறுப்பு கிரீடம் அணிந்தவர்கள் மற்றும் சதா பாபாவின் மன சிம்மாசனதாரிகள். கீழே வரக் கூடாது. சதா ஆசனதாரி. அப்படியும் பாருங்கள், யார் மிக அன்பானவராக், செல்லக் குழந்தைகளாக இருக்கிறார்களோ, தாய்- தந்தையர் அவர்களை மண்ணுக்குள் போக விட மாட்டார்கள். தரை மீது கால் பதிக்கவிட மாட்டார்கள்.

அப்போது நீங்கள் எவ்வளவு செல்லமானவர்கள்! நீங்கள் செல்லமானவர்களா அல்லது இனி வரப்போகிறவர்களா? நீங்கள் தாம். ஆக, சிம்மாசனத்தை விட்டு, சாதாரண சொரூபம், சாதாரண சங்கல்பம்... இந்த மண்ணில் அல்லது தரையில் கால் பதிக்காதீர்கள். புத்தி ரூப கால் சதா ஆசனத்தில் அமர்வதாக இருக்க வேண்டும். பரமாத்ம தந்தையின் குழந்தைகள் நீங்கள். மகாத்மா, தர்மாத்மாவின் குழந்தைகள் இல்லை. பரம ஆத்மா வுடையவர்கள். இப்போதோ அனைவரும் நஷாவில் சரியாக இருக்கிறீர்கள். அதுவோ காணப்படுகிறது, ஆனால் சதா இருக்கும் இல்லையா? அல்லது கொஞ்ச நேரம் இருக்கும், பிறகு யுத்தம் செய்வீர்கள், பிறகு வெற்றி பெறுவீர்கள் - அந்த மாதிரி இல்லையே? நீங்கள் பிராமணர்களா, சத்திரியர்களா? பிராமணர்கள். சத்திரியர்கள் இல்லை. யுத்தம் செய்ய வில்லையே? அல்லது சில நேரம் பிராமணர் ஆகி விடுகிறீர்கள், சில நேரம் சத்திரியர் ஆகி விடுகிறீர்களா? மாயாவோடு யுத்தம் செய்ய நேர்கிறது என்றால் சத்திரியர் ஆகி விட்டீர்கள். பிராமணர் என்றால் வெற்றியாளர், சத்திரியர் என்றால் யுத்தம் செய்பவர். பாப்தாதாவுக்கோ சில நேரம் குழந்தைகள் மீது அதிக இரக்கம் வருகிறது. யோகத்தில் அமர்கிறார்கள், ஆனால் செய்வது யுத்தம். ஒரு மணி நேரம் யோகா செய்யப் போகிறேன் எனச் சொல்வார்கள். ஆனால் ஒரு மணி நேரத்தில் யுத்தம் எவ்வளவு நேரம் நடந்தது? ஏதேனும் காரணத்தால் அனுபவம் ஏற்படவில்லை என்றால் அவசியம் யுத்தத்தின் ஸ்டேஜ் தான். பாப்தாதா சொல்கிறார் - யோகி குழந்தைகள், ஆனால் யுத்த குழந்தைகளாக ஆகி விடுகிறார்கள். எது வரை யுத்தம் செய்வீர்கள்? கடைசி வரை யுத்தம் செய்வீர்களா? யுத்தம் செய்யுங்கள் என்று விட்டு விடலாமா? விடுதலை வேண்டுமா? வேண்டாமா? பிறகு என்ன செய்கிறீர் கள்? பலவீனமாகி விட்டால் மாயா அவ்வளவு அடிமையாக்கி விடுகிறது - விரும்புவதில்லை, ஆனால் செய்து விடுகிறீர்கள். எப்படி செர்வன்ட்டுகளில் (பணியாளர்கள்) சிலர் மிகவும் வெகுளியாக உள்ளனர் என்றால் எஜமானர் அவர்களை அடிமையாக்கி விடுகிறார்கள். செர்வன்ட் எதைச் செய்ய முடியாதோ, அதையும் எஜமானர் செய்யச் சொல்வார். இல்லை யென்றால் ஏன் பணி செய்கிறாய் எனக் கேட்பார். மாயாவும் அது போல் செய்கிறது. நீங்கள் விரும்புவதில்லை. ஆனால் பலவீனமாக இருக்கும் காரணத்தால் மாயாவின் அடிமை ஆக வேண்டி உள்ளது. ஆக, அச்சமயம் நீங்கள் யோகியா அல்லது யுத்தம் செய்பவரா? யோகி என்றோ சொல்ல மாட்டார்கள் இல்லையா? ஆகவே பாப்தாதா இதைத் தான் விரும்புகிறார் - ஒவ்வொரு குழந்தையும் யோகி குழந்தையாக வேண்டும், யுத்தம் செய்பவராக ஆகக் கூடாது. பாப்தாதாவுக்கு, குழந்தைகளின் யுத்தம் செய்வ தற்கான கடின உழைப்பு பிடிக்கவில்லை. பரமாத்ம குழந்தைகளோ, சதா மகிழ்ச்சியில் இருப்பவர்கள், மஜாவில் இருப்பவர்கள். யத்த மைதானத்தில் இருப்பவர் அல்லர். ஆக, என்னவாக ஆவீர்கள்? யோகி குழந்தைகளா, யுத்த குழந்தைகளா? யோகி ஆவீர்களா அல்லது கொஞ்சம்-கொஞ்சம் யுத்தம் செய்வது நன்றாக இருக்கிறதா? சொல்லும் போதோ ஆம், ஆம் எனச் சொல்கிறீர்கள். செய்யும் போது, அச்சமயம் ஃபோட்டோ எடுக்கப் படுகிறது. ஆக, இவ்வருடம் அனைவரின் சார்ட் - சதா ராஜ்ய அதிகாரி என்று இருக்க வேண்டும். அடிமைத் தனம் முடிந்தது. நல்லது.

அனைத்துப் பக்கங்களின் தேச-விதேசத்தின் அனைத்து சூட்சும சொரூபத்தில் இருந்து காட்சி பார்க்கக் கூடிய ஆத்மாக்களுக்கு, நாலாபுறத்தின் சதா சிரேஷ்ட பாலனையில் வளரக்கூடிய, சிரேஷ்ட படிப்பின் மூலம் ராஜ்ய பதவி பெறக்கூடிய

ஆத்மாக்களுக்கு, சத்குரு மூலம் சர்வ வரதானங்கள் பெறக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா மாயாஜீத் வெற்றி ரத்தின, சதா யுத்தத்தை விட்டு, ராஜயோகி ஸ்திதியில் நிலைத்திருக்கக் கூடிய சர்வ சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

வரதானம் : தனிமை மற்றும் ஒருமுகத் தன்மையின் கவனம் மூலமாக தீவிர வேகத்தில் சூட்சும சேவை செய்யக்கூடிய உண்மையான சேவாதாரி ஆகுக.

தொலைவில் அமர்ந்தவாறு எல்லையற்ற உலகின் ஆத்மாக்களுக்கு சேவை செய்வதற் காக மனம், புத்தி சதா ஃப்ரீயாக இருக்க வேண்டும். சிறு-சிறு சாதாரண விஷயங்களில் மனம், புத்தியை பிஸியாக்கி விடாதீர்கள். தீவிர வேகத்தின் சூட்சும சேவைக்காக தனிமை மற்றும் ஒருமுகத்தன்மை மீது விசேஷ கவனம் கொடுங்கள். பிஸியாக இருந்தாலும் இடை யிடையில் ஒரு நிமிடம், இரண்டு நிமிடங்கள் ஒதுக்கி தனிமையின் அனுபவம் செய்யுங்கள். வெளிப்புறத் தின் சூழ்நிலை குழப்பமானதாக இருந்தாலும் மனம்-புத்தியை எந்தச் சமயம் விரும்புகிறீர்களோ, அப்போது ஒருவரின் நினைவில் ஒரு விநாடி ஒருமுகப்படுத்தி விடுங்கள். அப்போது உண்மை யான சேவாதாரி ஆகி, எல்லையற்ற சேவைக்கு நிமித்தம் ஆக முடியும்.

சுலோகன்: யார் ஞானத்தின் ஒவ்வொரு ரகசியத்தையும் புரிந்து கொண்டு ராஜ்-யுக்த், யுக்தி-யுக்த் மற்றும் யோக-யுக்த் ஆகிக் கர்மம் செய்கிறார்களோ, அவர்கள் தாம் ஞானம் நிறைந்த ஆத்மா அவார்கள்.